# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்

# நல்லாட்சிக்கு மக்கள் தரும் மதிப்பெண் !

## உங்களில் ஒருவன் முதல் பக்கத் தொடர்ச்சி



8. கருங்கல்பாளையத்தில் 272 பயனாளிகளுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

9. ரூ.2.43 கோடி மதிப்பீட்டில் பிராமண பெரிய அக்ரஹாரத்தில் உள்ள பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டட மராமத்து பணி நடைபெற்று வருகிறது.

10. ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளுக்கான புதை சாக்கடைத் திட்டம் மீண்டும் தொடக்கப்பட்டு பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது.

11. ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.1,600 கோடி மதிப்பிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

12. ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் வாகன நெரிசலைக் குறைத்திட, ஈரோடு வெளிவட்டச் சுற்றுச் சாலை தற்போது நாமக்கல் மாவட்டம் கொக்கராயன் பேட்டையில் தொடங்கி ஈரோடு மாவட்டம், ஈரோடு - பெருந்துறை - காங்கயம் சாலை வரை 14 கிலோமீட்டருக்கு அமைக்கப்பட்டுள்ளது.

13. ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் 2024 வரை 1,38,712 பயனாளிகள் பயனடைந்து உள்ளனர்.

14. பாதாள சாக்கடை, ஊராட்சிக் கோட்டை குடிநீர்த் திட்டப் பணிகளால் சேதமடைந்து போக்குவரத்துக்குச் சிரமம் ஏற்படுத்திய காவேரி சாலை முதல் ஆர்.கே.வி. ரோடு மணிக்கூண்டு சந்திப்பு வரை 2 கோடி மதிப்பீட்டில் புதிதாக தார்சாலைகள் அமைக்கப்பட்டது.

15. ஈரோடு மாநகர மையப் பகுதியான கோட்டை, மணிக்கூண்டு, கருங்கல்பாளையம், மீனாட்சி சுந்தரனார் சாலை, நேதாஜி சாலை, ஆர்.கே.வி சாலை, முனிசிபல் சத்திரம், கச்சேரி வீதி மற்றும் காரை வாய்க்கால் ஆகிய பகுதிகளில் சுமார் 3000 குடியிருப்புகள், வணிக கட்டிடங்களுக்குப் பட்டா வழங்கப்பட்டது.

16. இளைஞர்கள் - மாணவ - மாணவிகளுக்கு, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சிக் கட்டடம் காமராஜர் மேல்நிலைப் பள்ளியில் ரூ.6.17 கோடி மதிப்பீட்டில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

17. கருங்கல்பாளையம் வேபிரிட்ஜ் முதல் காவேரி சாலை ஆர்.கே.வி. ரோடு மணிக்கூண்டு வரை இரு பக்கமும் புதிதாகச் சாக்கடைகள் ஆழப்படுத்தி, தளம் அமைத்து கவரிங் சிலாப் முறையில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

18. ஈரோடு கிழக்கு தொகுதியில் 10 இடங்களில் சுகாதார மையங்கள் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயல்பாடுகளை நேரில் கண்டறிவதுடன், புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளையும் வெளியிடும் வகையில் உங்களில் ஒருவனான நான் மேற்கொள்ளும் மாவட்ட வாரியான ஆய்வுக்கூட்டத்தின் அடிப்படையில் கடந்த டிசம்பர் 19 அன்று ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின்போது, புதிய பேருந்து நிலையங்களுக்கான பணிகளின் நிலை, மஞ்சள் ஏற்றுமதி மையம் - மஞ்சள் தூள் உற்பத்தி மையம் ஆகியவற்றின் பணிகள், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான தொடக்கக் கட்டப் பணிகள், மேலும் சில புதிய பணிகள் ஆகியவை குறித்து அதிகாரிகளுடன் ஆய்வுசெய்து அவற்றை விரைந்து முடிக்க ஆணையிட்டுள்ளேன். தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் இருப்பதால், இடைத்தேர்தலுக்குப் பிறகு இந்தப் பணிகள் விரைவு பெறும்.

> **“ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்கள் மீதும், அங்கே தேர்தல் பணியாற்றும் கழக உடன்பிறப்புகள் மற்றும் தோழமைக் கட்சியின் செயல்வீரர்கள் மீதும் உங்களில் ஒருவனான நான் வைத்திருக்கும் நம்பிக்கையினாலும், என் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையினாலும், நான் நேரில் வந்து வாக்கு சேகரித்ததாகக் கருதி, தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் அவர்களுக்கு பிப்ரவரி 5-ஆம் தேதியன்று உதயசூரியன் சின்னத்தில் பெருவாரியான வாக்குகளை அளித்து மகத்தான வெற்றியை அளிக்குமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.”**

இந்தியாவுக்கே வழிகாட்டும் வகையில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ள திராவிட மாடல் அரசின் முன்னோடித் திட்டங்களான மாதம் 1000 ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அரசுப் பள்ளி மாணவிகளின் உயர்கல்விக்கான புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கான தமிழ்ப்புதல்வன் திட்டம், விடியல் பயணம் திட்டம், காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட பல திட்டங்கள் ஈரோடு கிழக்கு தொகுதியில் சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளன. முதல்வரின் முகவரி, மக்களுடன் முதல்வர் முகாம் ஆகியவற்றில் ஈரோடு கிழக்கு தொகுதியைச் சார்ந்த மக்கள் அளித்த மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கான குடும்ப அட்டைகள், சான்றிதழ்கள் உள்ளிட்டவை வழங்கப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கூடுதலாக துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும், சாயக் கழிவுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு, குப்பைகளைத் தரம் பிரிக்கும் வசதிகள், புதிய மேம்பாலத் திட்டங்கள், மகளிர் அரசுக் கல்லூரி, வேளாண் கல்லூரி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் விசைத்தறிப் பயிற்சி மையங்கள், தோல் பதப்படுத்தும் பயிற்சி மையம் உள்ளிட்ட பல கோரிக்கைகளையும் கழக வேட்பாளர் வாக்கு சேகரிக்கும்போது ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்கள் வைத்துள்ளனர். எந்தக் கோரிக்கை வைத்தாலும் அதனை உரிய முறையில் பரிசீலித்து, நிறைவேற்றித் தரக்கூடியதாக திராவிட மாடல் அரசு இருக்கிறது என்ற நம்பிக்கைதான், இந்த அரசின் திட்டங்களின் பயனாளிகளான ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்கள் புதிய கோரிக்கைகளை வைப்பதற்குக் காரணம்.

தி.மு.கழக அரசின் மீது தமிழ்நாட்டு மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடுதான், ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்கள் கழக வேட்பாளருக்கு வழங்கும் மகத்தான ஆதரவு. இந்த அரசு மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையையும் ஆதரவையும் எப்படியாவது சிதைக்க வேண்டும் என்று நாளொரு அவதூறையும் பொழுதொரு பொய்யையும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து பரப்பினாலும் அவை மக்கள் மன்றத்தில் எடுபடுவதில்லை. பொழுது சாய்வதற்குள் எதிர்க்கட்சிகளின் பொய்களும் அவதூறுகளும் பொடிப் பொடியாகி விடுகின்றன.

**கழக வேட்பாளரை எதிர்க்க முடியாமலும், பொதுமக்களைச் சந்திக்கும் வலிமையில்லாமலும் அ.தி.மு.க, பா.ஜ.க. ஆகிய கட்சிகள் வழக்கம்போல அவதூறான குற்றச்சாட்டுகளைச் சொல்லி ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலைப் புறக்கணித்துள் ளன. தி.மு.க.வை நேரடியாக எதிர்க்கும் துணிவின்றி சில உதிரிகளைத் தூண்டிவிட்டு, மறைமுக யுத்தம் நடத்திப் பார்க்கின்றன.**

தமிழ்நாட்டின் நலனுக்காகப் பாடுபடுகிற கழக அரசையும், தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசையும் தமிழ்நாட்டு மக்கள் சரியாக அடையாளம் கண்டு வைத்திருக்கிறார்கள். அதனை ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்கள் இடைத்தேர்தலில் உதயசூரியனுக்கு அளிக்கும் மகத்தான வெற்றியின் வாயிலாக நிரூபிப்பார்கள்.

**ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்கள் மீதும், அங்கே தேர்தல் பணியாற்றும் கழக உடன்பிறப்புகள் மற்றும் தோழமைக் கட்சியின் செயல்வீரர்கள் மீதும் உங்களில் ஒருவனான நான் வைத்திருக்கும் நம்பிக்கையினாலும், என் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையினாலும், நான் நேரில் வந்து வாக்கு சேகரித்ததாகக் கருதி, தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் அவர்களுக்கு பிப்ரவரி 5-ஆம் தேதியன்று உதயசூரியன் சின்னத்தில் பெருவாரியான வாக்குகளை அளித்து மகத்தான வெற்றியை அளிக்குமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.**

நம்மை வழிநடத்தும் தலைவரும், நம் தலைவர்களுக்கெல்லாம் தலைவருமான பகுத்தறிவுப் பகலவன் பெரியார் பிறந்த மண்ணில் நடைபெறும் இடைத்தேர்தலில், நல்லாட்சிக்கு மக்கள் தரும் மதிப்பெண்ணாக நம்முடைய தொடர் வெற்றி அமையட்டும். 2026 சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்குக் கட்டியம் கூறும் வகையில், ‘வெல்வோம் 200 - படைப்போம்’ வரலாறு என்பதற்கு முன்னோட்டமாக ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.கழகத்தின் மாபெரும் வெற்றியை எதிர்நோக்குகிறேன், உடன்பிறப்புகளின் உழைப்பினாலும், மக்கள் மீது உள்ள நம்பிக்கையினாலும்!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
தை 20
02.02.2025.

130-வது பிறந்த நாள்:

## தேவதாசி முறையை ஒழித்த பெருமை ஓமந்தூராரையே சாரும்!

### சிலைக்கு மாலை அணிவித்து அமைச்சர் க.பொன்முடி புகழாரம்!

*விழுப்புரம், பிப். 3 -*

*தமிழகத்தில் தேவதாசி முறையை ஒழித்த பெருமை முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூராரையே சாரும் என வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஓமந்தூரார் அவர்களின் 130 வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது மணி மண்டபத்தில் அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி புகழாரம் சூட்டினார்.*

*தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூரார் அவர்களின் 130வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திண்டிவனம் அடுத்த ஓமந்தூரில் உள்ள அவரது மணி மண்டபத்தில் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி ஓமந்தூரார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.*



*பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி கூறியதாவது :-*

*மணிமண்டபம் அமைத்தது தி.மு.க. ஆட்சி காலத்தில் தான். அப்போது முதலமைச்சராக இருந்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கினார். அப்போது அமைச்சராக இருந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திண்டிவனம் வருகை புரிந்து மணி மண்டபம் கட்டுவதற்கான இடத்தை தேர்வு செய்து முன்னின்று அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்.*

*அதனைத் தொடர்ந்து ஓமந்தூரார் பிறந்தநாள் விழா மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் முதல் முதலமைச்சராக பதவி ஏற்ற ஓமந்தூரார் அவர்கள் தேவதாசி முறையை ஒழித்ததும், அனைவரும் கோவிலுக்குள் நுழைய அதிகாரம் வழங்கியதும், ஜமீன்தார் முறையை ஒழித்ததும், வடலூரில் சுத்த சன்மார்க்க மையம் அமைத்த பெருமையும் ஓமந்தூராரையே சாரும்.*

*அவர் சார்ந்த சமுதாயத்திற்கு மட்டுமல்ல தமிழகத்தில் உள்ள அனைத்து சமுதாய மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு சட்டங்களை இயற்றிய பெருமை ஓமந்தூராரையே சாரும் என பெருமையுடன் தெரிவித்தார்.*

*திண்டிவனம் சார் ஆட்சியர், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் ப.சேகர், விழுப்புரம் தெற்கு மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் , தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, வடக்கு மாவட்ட பொருளாளர் ரமணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாசிலாமணி, முன்னாள் நகர செயலாளர் கபிலன், தலைமைச் செயற் குழு உறுப்பினர் சீனி ராஜ், இளைஞர் அணி அமைப்பாளர் கண்ணன் ஆனந்த், துணை அமைப்பாளர் டி.கே.பி.ரமேஷ், எம்.டி. பாபு, அண்ணாமலை உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.*



முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற பிப்ரவரி 6 மற்றும் 7 ம் தேதிகளில் நெல்லை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தருவதை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.உடன் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன்,தீர்மான குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில நிர்வாகிகள் மாலை ராஜா,விஜிலா சத்யானந்த், ராஜவர்மன்,தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.எல். எஸ்.லெட்சுமணன்,துணை செயலாளர்கள் தர்மன்.சுரேஷ். கிரிஜா குமார்,முன்னாள் மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

கழக நெசவாளர் அணி துணைச் செயலாளர்

## ஆண்டிப்பட்டி ஆ.ராமசாமி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை,பிப்,3-

திராவிட முன்னேற்றக் கழக மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர்ஆ.ராமசாமி அவர்கள் 1.2.2025 அன்று இரவு இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச் செய்தி அறிந்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

கழக நெசவாளர் அணியின் மாநில துணைச் செயலாளரும், ஆண்டிப்பட்டி பேரூராட்சி முன்னாள் தலைவருமான திரு. ஆ.ராமசாமி அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து வருத்தமுற்றேன்.

கழகத்தின் கொள்கை வழி நின்று கழகமே தனது மூச்சாக பணியாற்றியவர். கலைஞர் அவர்கள் மீதும்,என் மீதும் மிகுந்த பற்று கொண்டவர்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர்களுக்கும் - கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



நெல்லை மாவட்டம் நெல்லை வர்த்தக மையத்தில் பொருநை 8 வது புத்தகத் திருவிழாவினை மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் சாகித்திய அகாதமி விருதாளர் எழுத்தாளர் கண்ணதாசன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல்வகாப் (பாளை)ரூபி மனோகரன்(நாங்குநேரி) மேயர். கோ.ராமகிருஷ்ணன் துணை மேயர் ராஜ்,மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் சந்திரசேகர் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.